நான் ஒழிந்து நீ ஆக வேண்டும் ஐய்யா
நாதாந்த துய்யனே வேதாந்த மெய்யனே

தானாகி நிற்பதை ப்ரஹ்மம் என்று கூறுவர்
ப்ரஹ்மமாகி நிற்பதே நீ என்று கூறுவேன்

மானாடும் மயிலாடும் ஆட்டத்திற்கு அளவுண்டு
மனமாடும் ஆட்டத்திற்கு அளவேயில்லை

அளவில்லா ஆட்டத்தால் அகிலத்தில் அலைகின்றேன்
அரும் பாடு பட்டும் உள்ளே அமைதி இல்லை
அமைதியில்லாவாழ்வு அடியேனுக்கெதற்காக
அழித்து விடு எந்தன் ஆணவத்தை
ஆணவம் அழிந்தால்தான் அறியமுடியுமுன்னை
அண்டி வந்தேன் ஞானானந்த வள்ளலே
( ஹரிதாசனின் வள்ளலே)